மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

மலர்: 01 | குரல்: 117 | வள்ளுவர் ஆண்டு 2054 | வியாழக்கிழமை 28.12.2023

# ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும்!

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு



பக்கம் 02



## இலங்கையில் அரசியல் தீர்வு மிக அவசியம்! நியூசிலாந்து தூதுவர் வலியுறுத்து!!

பக்கம் 08

## மலையக மக்களைக் கௌரவித்து இந்தியா வெளியிடும் முதல் முத்திரை!



பக்கம் 09

## பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதாகியவர் பிணையில் விடுதலை.

சட்டத்தரணி அஞ்சனனின் வாதத்தால்



பக்கம் 10

## தாயகத்தில் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களை மறைக்க வீரசேகர இனவாத பித்தலாட்டம்!



பக்கம் 10

## யாழில் மார்கழி இசை விழாவும் உற்பத்தியாளர்களின் கண்காட்சியும்!




பக்கம் 11



## ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# மக்களை அணி திரட்டும் அரசியல்

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற முரண்பாடுகள் களையப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகி விட்டது. தமிழர்களின் அரசியல் வரலாறு ஆயுதப் போராட்டத்துடன் முடிவுக்கு வந்துவிட்டதாக எல்லோரும் சந்தேகம் கொள்ளும் வகையிலான செயற்பாடுகளே இப்போது நடைபெற்று வருகின்றன.

தமிழர்களின் உரிமைப் போராட்டமானது அகிம்சை வழியிலும், பின்னர் ஆயுத வழியிலும் அதன்பின் மீண்டும் அகிம்சை வழியிலான அரசியலாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழர்களுடைய இனப்பிரச்சினை இலங்கை சுதந்திரமடைந்தது முதலே ஆரம்பித்துவிட்டது என்றாலும் இதுவரையில் தீர்வை எட்டுவதற்கு முடியாததாகவே இருக்கிறது.

இலங்கையின் அரசியலமைப்புக்கு 22 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் ஒன்று கூட தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசையை நிறைவேற்றிவைக்கவில்லை. தவிர மேலும் இனப்பிரச்சினை கூர்மையடையவே காரணமாகியிருக்கிறது. ஆனால், அதன் பின்னர் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் நாட்டில் முழுமையாக நடைமுறையிலுள்ளன. அதற்கான காரணம் என்ன என்பது வெளிப்படையானதே.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்தியாவுடன் 1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தம் நாட்டின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அது இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. 13வது திருத்தம் புரையோடிபோயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக இல்லாது விட்டாலும் ஒரு இடைக்காலத் தீர்வாக அமைந்திருப்பதாக குறிப்பிட்டளவு தமிழர்கள் நம்பியிருந்தனர். ஆதனால்தான் வட கிழக்கு மாகாண சபை உருவானது.

13ஆவது திருத்தச் சட்டம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக ஏற்பட்டிருந்தாலும் அதனைக்கூட இலங்கையின் ஆளும் பெரும்பான்மைச் சமூகம் முழுமையாக அமுல்படுத்துவதற்கான ஏதுநிலையை ஏற்படுத்தவில்லை.

13ஆவது திருத்தத்தின் மூலமான மாகாண சபை முறைமையின் பயனை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் அனுபவித்தாலும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான முதல் கல்லாக இருந்தாலும் தமிழர்களால் அதனை பூரணமாக அனுபவிக்க முடியவில்லை. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை 13 நிறைவேற்றவில்லை, நிறைவேற்றாது என்ற முடிவுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தனர்.

ஆனால், இப்போதும் அதனைக்கூட அடைந்து கொள்ள முடியாமல் கோரிக்கை விடுக்கும் நிலையிலேயே அரசியல் தீர்வின் நிலைமை காணப்படுகிறது.

ஈழ யுத்தத்தின் தோல்வியை ஏற்றுக் கொள்வதற்குப் பலர் தயங்கினாலும் அதனை ஏற்றுக்கொண்டு அடுத்த நிலையை நோக்கி நடைபோடக்கூடியவர்களாக நாம் மாற முயற்சிக்கவில்லை. இது நம் மீது நாமே வைத்துக் கொள்ள வேண்டிய குற்றச்சாட்டாகும். தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் நிச்சயமாகத் தேவையானது.

2001ஆம் ஆண்டில் கடந்த கால கசப்புணர்வுகள், முரண்பாடுகளை மறந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் உருவாக்கப்பட்டது. அந்த உருவாக்கம் தமிழர்களின் ஏகோபித்த அரசியல் தரப்பாக அக் கூட்டு இருக்கவேண்டும் என்ற நோக்கத்திலேயே நடைபெற்றிருந்தது.

தமிழ் மக்களுடைய அரசியல் நிலைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் பலமாக இருந்தது. ஆனால், ஆரம்பித்த காலத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதய சூரியன் சின்னம் இல்லை என்றானதனால் தந்தை செல்வாவினால் கிடப்பில் போடப்பட்டு, இயக்கமின்றி இருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமானது.

அது தமிழர்களின் அரசியல் சின்னமாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடே அக்காலத்தில் இருந்தது. இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனித்த ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கு தமிழரசுக்கட்சி விரும்பாமையினால் இப்போது தனிக் கட்சியாக தமிழரசுக்கட்சி மாறியிருக்கிறது.

தமிழர்களின் அரசியலை தனித்து நின்று மேற்கொள்ள முடியாது என்பதனைப் புரிந்து கொண்டமையினால் உருவான கூட்டமைப்பு சிதைந்து போயிருக்கின்ற இவ்வேளையிலும் தமிழ்த் தேசிய நலனைக் கருத்தில் கொள்ளாத அரசியலை நடத்துவதில் பயன் ஏதும் விளையாதென்பது புரிந்துகொள்ளப்படவில்லை.

அதற்காகவே தமிழ்த் தேசிய நலனும், அதன் நிலைப்பாடும் மாற்றமுறா வகையில் மக்களை அணி திரட்டும் அரசியல் ஒன்றை நோக்கிப் பயணிப்போம்.

# ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும்!

தமிழ் மக்கள், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்த தரப்பிற்கும் வாக்களிக்காது அந்த தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நேற்று (27.12.2023) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். இந்த தேர்தலில் எந்தவொரு சிங்கள தரப்பினருக்கும் வாக்களிக்க கூடாது என தமிழ் மக்கள் ஒரு உறுதியான நிலைப்பாட்டில் உள்ளனர். எனவே, இது போன்றதொரு பின்னணியில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான கதை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**(விரிவான கட்டுரை நாளைய இதழில் பிரசுரமாகும்.)**



# இலங்கையின் ஆட்சியை பிடிப்பதே எனது நோக்கம்! மகிந்த திட்டவட்டம்



எதிர்வரும் அதிபர் தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்வதே தனது எதிர்பார்ப்பு என முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிக்கு செல்வதோ அல்லது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தை பெறுவதோ எமது எதிர்பார்ப்பு இல்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இரண்டாவது நாளாக ஆரம்பமான ”கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பம்” கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின் திறப்பு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**அடுத்த ஆண்டு தேர்தல்**

கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பக் கல்விக் கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி கிரிந்திவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிரிந்திவெல மகா வித்தியாலயத்தை மையமாகக் கொண்டு கடந்த (25) ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் ஆரம்பமானது. அது 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இது அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளில் 50க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் வர்த்தக கடைத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.

**இது தொடர்பில் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச மேலும் கூறியதாவது:**

மகிந்தவின் பதில்கள்

**கேள்வி** - அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு. கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பீர்களா?

**பதில்** - அப்படி எதுவும் இல்லை. தற்போது இருக்கின்ற அமைப்பாளர்களின் தவறில்லை.தேர்தலும் உண்டு.

**கேள்வி-** கட்சியில் இருந்து விலகியவர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன?

**பதில்-** கட்சியில் இருந்து விலகியவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்த விஷயங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்று நினைக்கிறேன்.

**கேள்வி-** இந்நாட்களில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

**பதில்-** இந்த அரசாங்கம் செய்த சிறந்த பணியாக நான் இதைக் கருதுகிறேன். போதைப்பொருளால் இந்த நாடு அழிந்து வருகிறது.

**கேள்வி-** எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க நீங்கள் தயாராகி வருவதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?

**பதில்-** இதுவரை அப்படி ஒரு கதை இல்லை. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு. எதிர்க்கட்சிக்கு செல்லும் எதிர்பார்ப்பு எம்மிடம் இல்லை.

**கேள்வி-** எதிர்காலத்தில் வரி குறைக்கப்படுமா? அதிகரிக்கப்படுமா?

**பதில்-** வரிகளை நீக்க முடியாது, வரிகள் இருக்கும். அதாவது மக்களுக்கு நியாயமான வரி முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் கூறுகிறேன். என்றார்.




தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339
வார இதழ் தேசியம் www.thesiyamnews.com THESIYAM



# ஆஸியில் உருவான முதலாவது விண்கலம் வானில் ஏவப்படுகிறது !




அவுஸ்திரேலிய மண்ணில் தயாரிக்கப்பட்ட முதல் விண்கலம் விண்ணில் ஏவப்படுகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராக்கெட் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் குயின்ஸ்லாந்தில் உள்ள ஏவு தளத்தில் இருந்து ஏவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட முதல் விண்கலம்:**

கோல்ட் கோஸ்ட்டைத் ( GOLD COAST) தளமாகக் கொண்ட நிறுவனமான 'கில்மோர் ஸ்பேஸ்' அமைப்பான 'எரிஸ்' என்ற பெயரில் இறுதி தயாரிப்புகளை முடித்துள்ளது. இது 2024 மார்ச் மாதத்தில் ஏவப்படும் என்று நம்புகிறது.

25 மீட்டர் உயரமும், 30 தொன் எடையும் கொண்ட மூன்று நிலை எரிஸ் ராக்கெட் ஐந்து ஹைப்ரிட் என்ஜின்களால் இயக்கப்படுகிறது. அவை திட எரிபொருள் மற்றும் ஒரு திரவ ஆக்சிடரை சரைக் கொண்டுள்ளன.

முதலில் 2023 இல் புறப்படும் என எதிர்பார்க்



கப்பட்ட எரிஸ் விண்கலம், 500 கிமீ உயரத்தில் உள்ள பூமத்திய ரேகை சுற்றுப்பாதையில் ஏவவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் ஒப்புதல்கள் உட்பட பல்வேறு ஒழுங்குமுறை அனுமதிகளைப் பெற்ற பிறகு, 'கில்மோர் ஸ்பேஸ்' இப்போது புதிய அவுஸ்திரேலிய விண்வெளி ஏஜென்சியின் இறுதி ஏவுகணை ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டி உள்ளது.

**குயின்ஸ்லாந்தில் ஏவுப்படுல்:**

குயின்ஸ்லாந்தில் உள்ள போவெனுக்கு வெளியே பிரத்யேகமாக கட்டப்பட்ட ஏவுதளத்தில் இங்கு தயாரிக்கப்பட்ட அவுஸ்திரேலியக்கு சொந்தமான ராக்கெட்டை ஏவப்டுகிறது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கதாக கருதப்படுகிறது.

1950களின் போது அமெரிக்க மற்றும் பிரித்தானிய ராக்கெட்டுகள் தெற்கு அவுஸ்திரேலியல் உள்ள வூமேரா சோதனை தளத்திலிருந்து ஏவப்பட்டன. மேலும் எரிஸ் வெற்றி பெற்றால், விண்கல தொழில்நுட்பத்தை அணுகும் 12வது நாடாக அவுஸ்திரேலிய மாறும்.

நாங்கள் வேறொருவரின் தொழில் நுட்பத்தை நம்பியுள்ளோம். ஆனால் இப்போது இது எங்களுடையது, நாங்கள் இதை வடிவமைத்துள்ளோம், அவுஸ்திரேலியாவில் இதை உருவாக்கியுள்ளோம். இது அவுஸ்திரேலிய உருவாக்கம் என முன்னாள் வங்கியாளரும் வாழ்நாள் முழுவதும் விண்வெளி ஆர்வலருமான திரு கில்மோர் கூறியுள்ளார்.

எனவே, அவுஸ்திரேலியா என்ன விரும்புகிறது




என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், மேலும் எங்கள் முக்கிய கூட்டாளிகள் அனைத்தும் நூற்றுக்கணக்கான மில்லியன் முதல் பில்லியன் டாலர்களை ஏவுதளத் திறனுக்காகக் கொட்டி வருகின்றன என்பதை உணர வேண்டும் என விண்வெளி ஆர்வலருமான திரு கில்மோர் தெரிவிக்கிறார்.

**அவுஸ்திரேலிய விண்வெளித் துறை:**

அவுஸ்திரேலியவின் வளர்ந்து வரும் விண்வெளித் துறையின் உறுப்பினர்கள், 2022 தேர்தலுக்குப் பிறகு, இந்தத் துறையில் அரசு கவனம் செலுத்தாததால், லாபகரமான வாய்ப்புகள் இழக்கப்படுவதைப் பற்றி தொடர்ந்து எச்சரிக்கையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தொழில் மற்றும் அறிவியல் அமைச்சர் எட் /ஹசிக், இயற்கை பேரழிவுகள், விவசாயம் மற்றும் கடல் கண்காணிப்பு பற்றிய தரவுகளை சேகரிக்க அவுஸ்திரேலிய செயற்கைக் கோள்களை உருவாக்குவதற்கான மாரிசன் அரசாங்கத்தின் திட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.



இந்த ஆண்டு மே மாதம் 'கில்மோர் ஸ்பேஸ்' தொழிற்சாலைக்கு விஜயம் செய்த பிரதமர் அந்தோனி அல்பானீஸ் எரிஸ் விண்கல திட்டத்தை "ஒரு சிறந்த அவுஸ்திரேலிய வெற்றியின்கதை" என்று அறிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ராக்கெட்டை நீங்கள் பார்க்கிறீர்கள், அது வான் சுற்றுப்பாதையில் ஏவுவதற்கு வெற்றிகரமாக முயற்சிக்கிறது என பிரதமர் திரு அந்தோனி அல்பானீஸ் கூறியுள்ளார்.

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# முல்லைத்தீவில் 4500 துப்பாக்கி ரவைகள் மீட்பு.



சண்முகம் தவசீலன்

வலைஞர்மடம் பகுதியில் உள்ள வயல்காணி ஒன்றில் T- 56 வகை துப்பாக்கி ரவைகள் 4500 நேற்றையதினம் (27.12.2023) மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வலைஞர்மடம் பகுதியில் கிறிஸ்தவ தேவாலய வீதியிலுள்ள வயல் காணி ஒன்றில் குறித்த காணி உரிமையாளர் காணியில் மண்ணை அகழ்ந்தெடுக்கும் போது துப்பாக்கி ரவை பெட்டிகள் இருந்ததனை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து அப்பகுதியில் உள்ள கடற்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து முல்லைத்தீவு பொலிஸார் குறித்த சம்பவ இடத்திற்கு வருகைதந்து குறித்த துப்பாக்கி ரவைகளை மீட்டெடுத்துள்ளனர். T-56 வகை துப்பாக்கி ரவைகள் அடங்கிய ஆறு பெட்டிகள் கண்டெடுக் கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 4500 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளது. குறித்த துப்பாக்கி ரவைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம்!

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது முல்லைத்தீவு மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான இறுதி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இன்று மாலை 2.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்கம் அதிபர் அ.உமாமகேஸ்வரன் அவர்களது வரவேற்புரையுடன் ஆரம்பமான கூட்டம் தற்போது இடம்பெற்று வருகிறது கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம் மற்றும் குலசிங்கம் திலீபன் வடமாகாண பிரதம செயலாளர் உள்ளிட்ட மாகாண திணைக்கள செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் மாவட்ட முப்படையினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர் இங்கு காணி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.









# மட்டக்களப்பு விவசாயிகளின் கவனஈர்ப்புப் போராட்டம்.










## விவசாயம் பாதிக்கப்படும் நிலை உருவானால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்!





கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு விவசாயப்பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தினை இரத்துச் செய்யுமாறு கோரி நேற்றைய தினம் (27) அவ் அலுவலகத்திற்கு முன்னால் கவனஈர்ப்பு ஒன்று விவசாயிகளால் நடத்தப்பட்டது. அலுவகத்திற்கு முன்னால் மட்டக்களப்பு மாவட்டத்தில் திரு.மு.பரமேஸ்வரன் பிரதி விவசாயப் பணிப்பாளராக கடமை ஏற்பதை எதிர்க்கிறோம் என்ற தலைப்பிட்ட பதாதையை தாங்கியவாறு விவசாயிகள் கவனஈர்ப்பில் ஈடுபட்டனர். இதன்போது தற்போது கடமையிலுள்ள பிரதி விவசாயப்பணிப்பாளரத இடமாற்றத்தினை இரத்துச் செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
கவனஈர்ப்பின் இறுதியில் கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு வழங்குவதற்கான கடிதம் ஒன்றையைும் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் கையளித்தனர். ஏற்கனவே கடமையாற்றி வருபவர் மேற்கொண்ட திட்டங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் அதனால் தங்களது விவசாயங்கள் பாதிப்படையும், என்றும் புதிதாக நியமனம் வழங்கப்பட்டவர் முன்னர் கடமையாற்றி பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இடமாற்றம் வழங்கப்பட்டவர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.
விவசாயம் பாதிக்கப்படும் நிலை உருவானால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# பட்டிருப்பு கல்வி வலயத்தில் சாதனையாளர் பாராட்டும் விழா - 2023

பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையினால் 2023ம் ஆண்டில் சாதனையாளர்களை பாராட்டும் விழா பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் நேற்று (27) திகதி இடம் பெற்றது. வலயக்கல்வி பணிப்பாளர் சீ.சிறிதரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே முரளீதரன் கலந்து கொண்டார். பாண்ட் வாத்திய இசை முழங்க அதிதிகள் வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமா கியது. பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட எழுபது பாடசாலை களில் கல்வி கற்று பொதுப்பரீட்சைகளில் சாதனை மற்றும் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், தேசிய மட்டத்தில் சாதனை படைத்தவர்கள் மற்றும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்த ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப் பட்டனர். இதன்போது மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், கற்றல் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் பல்வேறு சாதனை படைத்த மாணவர்களுக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. இந் நிகழ்வில் அரசாங்க அதிபர் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இங்கு அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில், கையடக்க தொலைபேசியில் நேரத்தை கடத்தாது கல்வியில் தமது நாட்டத்தை சொலுத்த வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரையினை வழங்கியிருந்தார். இந் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முன்னால் மட்டக்களப்பு தலைவர் சி.வசந்தராசா, பிரதி கல்வி பணிப்பாளர்கள், உதவி கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ.பார்த்தீபன், ஆசிரியர்கள் என பல பிரமுகர்கள் இதன்போது கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.












# யாழ் நகரப் பகுதியில் பொலிசாரால் விசேட தேடுதல் நடவடிக்கை! பலர் கைது





நாடு முழுவதிலும் பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் கீழ் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியகட்சகர் ஜெகத் நிஷாந்தவின் வழிகாட்டுதலில் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகரின் நெறிப்படுத்தலில் கீழ் நேற்று இரவு யாழ்ப்பாண நகர பகுதியில் பொலிசாரால் விசேட போதைப்பொருள் பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையப் பகுதி மற்றும் யாழ் நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களிலும் யாழ்ப்பாண பொலிசாரினால் மோப்ப நாய்களின் உதவியுடன் விசேட போதைப் பொருள் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது..

# இலங்கையில் அரசியல் தீர்வு மிக அவசியம்: சம்பந்தனிடம் நியூசிலாந்து தூதுவர் வலியுறுத்து



இலங்கையில் அமைதி ஏற்பட மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தியுள்ளார். இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்று (27.12.2023) சந்தித்து கலந்துரையாடி யுள்ளார். இதன்போதே நியூசிலாந்து தூதுவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

**அரசியல் தீர்வு**

இதன்போது கருத்து தெரிவித்த சம்பந்தன், "இலங்கைக்கான தூதுவர் பதவியிலிருந்து விரைவில் விடைபெறவுள்ள நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் இன்று காலை என்னைச் சந்தித்தார். இது நல்ல சந்திப்பு. இதன்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசினோம்அதிலும் முக்கியமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசினோம். இலங்கையில் அமைதியையும், நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான - நிலையான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன். அதேவேளை, சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன். தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

**வெளிநாடுகள் அழுத்தம்**

இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன். வடக்கு - கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரிடம் தெளிவுபடுத்தினேன். எனது கருத்துக்களை நியூசிலாந்து தூதுவர் ஏற்றுக்கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்றும், அங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்றும் கூறிய நியூசிலாந்து தூதுவர், அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்று தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்குக்குத் தான் நேரில் விஜயம் செய்து பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர் என்னிடம் கூறினார். இலங்கைக்கும், இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார்" என்றார்.

# மலையக மக்களைக் கௌரவித்து இந்தியா வெளியிடும் முதல் முத்திரை!

## செந்தில் தொண்டமானிடம் கையளிக்க ஏற்பாடு!




**இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்கவும் கௌரவமானதொரு வாழ்க்கையை வாழ்வ தற்கும், பல்வேறு போராட்டங்களையும் தியாகங் களையும் செய்துள்ளனர்.**

இவ்வாறானதொரு நிலையில், எமது மலையக மக்களுக்கான அங்கீகாரம் என்பது, இன்றைய சூழ்நிலையில் மாபெரும் தேவையாகவே காணப் படுகின்றது.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆலோசனையின் பேரிலும் தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை அவர்களின் ஏற்பாட்டிலும், நம் மலையக மக்களைக் கௌரவிக் கும் வகையில், இந்திய தபால்துறை அமைச்சினூ டாக முத்திரையொன்று வெளியிடப்பட்டு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் கௌரவிக் கப்படவுள்ளனர்.

புதுடில்லியில், இம்மாதம் 30ஆம் திகதியன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின் போது, பாரதீய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் கௌரவ ஜே.பி.நடா அவர்களால், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான கௌரவ செந்தில் தொண்டமான் அவர்களிடம் முதல் முத்திரை கையளிக்கப் படவுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு இடம்பெயர்ந்தமை தொடர்பான நூற்றுக்கணக் கான ஆவணங்கள், கோப்புகள் பரிசீலக்கப்பட்டு, உரிய வரலாற்றுச் சுவடுகளோடு இந்த முத்திரையை வெளியிடுவதற்கு, இந்தியத் தபால் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதன்மூலம், இலங்கைக்கு இடம்பெயர்ந்த தமிழர் கள் தொடர்பிலான வரலாறு, இந்தியர்களுக்கு எளிதில் எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க முத்திரையை, உலகின் மிகப்பெரிய அஞ்சல் வலையமைப்பைக் கொண்டுள்ள இந்தியாவின் 155,015க்கும் மேற்பட்ட தபால் நிலையங்களிலி ருந்து, எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், சீனா, ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பூட்டான் உள்ளிட்ட 210க்கும் மேற்பட்ட நாடுகளில் 32,285,425க்கும் அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் வசித்து வருகின்றனர். இவ்வாறிருக்கை யில், அந்த நாடுகளிலிருக்கும் மக்களுக்கு கிடைக்காத அங்கீகாரமொன்று, இலங்கையில் 200 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு கிடைத்திருப்பது, நம் மக்களுக்கு அளிக்கப்படும் மரியாதையாகவே பார்க்கப்படுகிறது.

**உதவி, கடமை, பொறுப்புணர்வு என்ற எண்ணப்பாடுகளுக்கு அப்பால், நம் மக்களை நாம் தான் கௌரவிக்க வேண்டும், அவர்களுக்கு நாம் தான் அங்கீகாரமளிக்க வேண்டுமென்ற தொனி யில், இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக முத்திரையொன்று வெளியிடப்படு வது, இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் நட்புறவைப் பறைசாற்றி நிற்பதோடு, மலையக மக்களால் இலங்கைக்கும் கௌரவம் கிடைத்திருக் கிறது.**

இவ்வாறானதொரு கௌரவிப்பு நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான கௌரவ செந்தில் தொண்டமான் அவர்களிடம் முதல் முத்திரையைக் கையளிக்க நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத் தக்கது.

# பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதாகியவர் பிணையில் விடுதலை.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் தலைவரது படம் மற்றும் சின்னம் பொறித்த டீசர்ட் அணிந்து மாவீரர் தினத்தில் பங்கெடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் இன்றைய தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.**

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவரது புகைப்படம் தாங்கிய டீ சட்டை அணிந்து கொண்டு மாவீரர் தினத்தில் பங்கு பற்றிய நிலையில் அன்றைய தினமே இராணுவத்தினரால் குறித்து இளைஞர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டி ருந்தார்.

இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவரை வளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இளைஞர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் இளைஞரை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கான விண்ணப்பத்தை மன்றில் செய்திருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞரை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து நேற்றைய தினம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த இளைஞரை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரின் சார்பில் சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் முன்னிலையாகி வாதாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தரணி அஞ்சனனின் வாதத்தால்



# தாயகத்தில் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களை மறைக்க வீரசேகர இனவாத பித்தலாட்டம்!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

வடக்கு , கிழக்கு மாகாணங்களை சிங்களவர்களி டம் இருந்து தமிழர்கள் பறிப்பதாக பாராளுமன்ற உறும்பினர் சரத் வீரசேகர இனவாத பித்தலாட் டத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளார் ஊடகங்களில்.

சிங்கள மக்களை ஏமாற்றி தமிழர் மீது இனவா தத்தை வீசி தன்னுடைய அரசியல் பிழைப்பை நடத்தும் வீரசேகர இலங்கைத்தீவு ஈழம் என்ற பெயரில் தமிழர்களால் ஆளப்பட்டிருக்கும் போது கள்ளத் தோணியில் வந்து குடியேறிய விஜயனின் பரம்பரை என்பதை இடை இடையே மறந்து விடுகிறார் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க சொன்னது போல சரத் வீரசேகரவின் மூளையை பரிசோதிக்க வேண்டும்.

பிரித்தானியரின் காலணித்துவ ஆட்சியில் நிர்வாக இலகுவாக்கலுக்காக தமிழர் தேசம் ஏனைய நிர்வாக அலகுகளுடன் இணைத்து ஒரே அலகாக கோல்புறுக் அரசியல் அமைப்பில் உள்வாங் கப்பட்டமையே தமிழரின் சுயாட்சி நசுக்கப்பட கார ணமானது. பின்னர் 1948 ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் பிரித்தானியரால் வழங்கப்பட்டது ஆனால் தமிழர்களுக்கு அது சுதந்திரம் அல்ல மேலும் அடிமைப்படுத்தலாக சிங்கள ஆட்சியா ளர்களால் வலுவடைந்தது அத்துடன் தமிழரின் சுயநிர்ணய உரிமைகள் கபளீகரம் செய்யப்பட்டன.

வடக்கு கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பில் 1950 ஆண்டு அம்பாறை மாவட்டம் கல்லோய திட்டம் என்ற போர்வையில் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பித்து பின்னர் அல்லை ,கந்தளாய் , மணலாறு என வியாபித்துள்ளது தமிழரின் பூர்வீக நிலங்கள் சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களினால் பறிக்கப்பட்டுள்ளன இப்படிப் பட்ட உண்மையை மறைத்து சிங்கள மக்கள் மத்தியில் மேலும் இனவாதத்தை தூண்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் சிங்கள மக்களிடம் இருந்து பறி போகிறது என பித்தலாட்டம் போடுகிறார் சரத் வீரசேகர.




# யாழில் மார்கழி இசை விழாவும் உற்பத்தியாளர்களின் கண்காட்சியும்!

மாபெரும் மார்கழி இசை விழாவும் வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சியும் விற்பனையும் மற்றும் வெளிநாட்டிற்கான சந்தைவாய்ப்பும் - மார்கழி 27, 28, 29.

மேற்படி ,இசைவிழாவும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சியும் விற்பனையும் இந்தியத்துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ் வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளார்கள்.

இவ் நிகழ்வானது யாழ் மத்திய கலாசார மண்டபத்தில் நேற்றைய தினம் ஆரம்பமாகியது இன்றும், நாளையும் இடம்பெறும்.

மாலை 4.45 முதல் இரவு 9.15வரை மார்கழி இசைவிழா நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் புகழ்பூத்த இலங்கைக் கலைஞர்கள், இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளார்கள்.

மேலும் தவில் நாதஸ்வர இசைச்சங்கமம், விரலோசை வயலின் கச்சேரி, நாதசங்கமம், விரலிசை கானம், நாட்டிய நாடகம், மற்றும் இந்தியக் கலைஞர்களின் பரதநாட்டிய நடன நிகழ்ச்சி, நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.அதே வேளை மண்டபத்தின் வெளிப்புறத் திடலில் காலை 9.00 மணிமுதல் இரவு 9.30 வரை சுமார் 140 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டு வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சிறிய நடுத்தர உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும், மற்றும் வெளிநாட்டிற்கான சந்தைவாய்ப்பும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது வடமாகாணத்தினைச் சேர்ந்த உற்பத்தியாளர்களின் மாபெரும் கண்காட்சியாக அமையவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான பிரவேசம் இலவசமானது.

ஆகவே வடமாகாண மக்களின் கலை கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்தளைப் பாதுகாக்கும் இசைநிகழ்விலும், மற்றும் வடமாகாண உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்தும் நோக்கில் நடைபெறவிருக்கும் வர்த்தகக் கண்காட்சியை பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.















அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




| தலைமையகம் | சுன்னாகம் | நெல்லியடி | பருத்தித்துறை | பூநகரி |
|---|---|---|---|---|
| 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 021 224 2022 | 021 226 0700 | 021 226 1100 | 021 320 1818 |
| 021 222 4353 | ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| 0777 22 5292 | முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |


# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான விசேட மாதிரி வினாத்தாள் பதிப்பு!

(அனுபவம் மிக்க ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டது)

## எதிர்வரும் தை மாதம் முதல்....

உங்கள் தேசியம் பத்திரிகையில்
வார இதழ்களாக வெளிவரவிருக்கின்றன.

தரம் 4 மற்றும் 5




வார இதழ் தேசியம் THESIYAM
077 1499094